டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.02.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 22 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 195 - Madurai | Online Edition

# வறண்ட வானிலையே தொடரும்!

சென்னை, பிப்.12

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு இல்லை என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும். வரும் 17ம் தேதி வரையில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரையில், வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும் என தெரிவித்துள்ளது.



# மாடித் தோட்டத்தில் வெட்டிவேர் சாகுபடி

கோயம்புத்தூர், பிப்.12

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மையத்தில் வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் சந்திப்பு வெட்டிவேரின் நன்மைகள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கான சாகுபடி முறைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

மேலும் பிரித்தெடுக்கப்பட்ட எண்ணெய் வாசனை திரவியங்கள், சோப்புகள் மற்றும் நறுமண சிகிச்சையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அதன் ஆழமான வேர் அமைப்பு மண் அரிப்பைத் தடுக்க உதவுகிறது. மேலும், மண் மற்றும் தண்ணீரை சுத்திகரிக்க உதவுகிறது.



வெட்டிவேர் மண் அரிப்பின் இழப்பைத் தடுப்பதன் மூலம் அத்தியாவசிய மண் ஊட்டச்சத்துக்களைத் தக்க வைக்க உதவுகிறது. வெட்டிவேரின் இலை மற்றும் வேர் பயோ மாஸிலிருந்து கரிமப் பொருட்களின் குவிப்பு, மண் நுண்ணுயிரிகள் மற்றும் தாவரங்களுக்கு வாழ்விடத்தை வழங்குகிறது, இது ஊட்டச்சத்து சுழற்சி மற்றும் கிடைக்கும் தன்மையில் முக்கிய பங்கு வகிக்கிறது. வெட்டிவேர் ஒரு உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு முகவராக செயல்படுவது கண்டறியப்பட்டு உள்ளது. வெட்டிவேர் சாகுபடியை விவசாய நடைமுறைகளில் ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகள் நீண்ட காலநிலைத் தன்மை, மேம்பட்ட மண் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு எதிராக அதிகரித்த பின்னடைவு ஆகியவற்றை கடந்து சாதிக்க முடியும் என்று கோயம்புத்தூர் எக்கோ கீரீன் யூனிட் திட்ட இயக்குநர் எஸ்.கே.பாபு கூறினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வெட்டிவேர் சாகுபடி பயிற்சி, அதனை வளர்ப்பதற்குப் பயன் படுத்தப்படும் குழாய்களின் வகை, ஏற்றுமதி, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், சாகுபடி சிரமங்கள், வேர் எடையைக் கண் காணித்தல், பொருளை விற்பனை செய்யும் செயல்முறை, உரம் பெறுதல் மற்றும் ஏழு மாத முதிர்வு காலத்திற்கு முன் வருமானம் ஈட்டுவதற்கான சாத்தியக் கூறுகள், வெட்டிவேர் சாகுபடி செய்த பின் காத்திருப்பு காலத்தில் வருமானம் ஈட்ட பிற பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் வருமானத்தை ஈடு செய்தல், இந்த சாகுபடி அமைப்பிற்குள் ஏதேனும் குறுகிய கால சாகுபடி வாய்ப்புகள் உள்ளிட்ட வெட்டிவேர் சாகுபடியின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொழில்முனைவோர்கள் கலந்துரை யாடினர்.




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில் நுட்ப மகத்துவ மையம் புதிய தொழில் முனைவோரை ஊக்கு விப்பதற்கும், விவசாயம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தை வணிக மாதிரிகளாக எடுத்துச் செல்ல இளம் தொழில்முனைவோரை விவாதிப்பதற்கும் வேளாண் தொழில்நுட்ப வணிக சந்திப்பு' 2025-ஐ நடத்தி வருகிறது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக நீங்களும் விவசாயி ஆகலாம் - மாடித் தோட்டத்தில் வெட்டிவேர் சாகுபடி என்ற தலைப்பில் கருத்தரங்கம் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் நேற்று முன்தினம் (11.2.25) நடைபெற்றது. வேளாண் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம் மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில், தாவர தொழில் நுட்பவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ.கோகிலாதேவி, பேராசிரியர் முனைவர் சு.மோகன்குமார் ஆகியோர் இக்கருத்தரங்கினை தலைமை தாங்கினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரிெ தாழில்நுட்ப மகத்துவ மைய மேலாளர் ம.செல்வராதிகா மலர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்து இவ்விழாவில் வரவேற்புரையாற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG-க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# மாநில அளவிலான பயிர் மகசூல் போட்டி நடுவர்கள் முன்னிலையில் நெல் அறுவடை பணி



விருதுநகர், பிப்.12

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டாரத்தில் அத்திகளும் செங்குளம் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் கடைப்பிடித்து RNR 15048 ரக நெல் சாகுபடி செய்து மாநில அளவிலான பயிர் மகசூல் போட்டியில் ரூபாய் 150/- கட்டணம் செலுத்தி ஞா.தேவப்பிரியம் விண்ணப்பித்திருந்தார்.




இந்நிலையில் அவரின் வயலில் அறுவடை நாளில் நெல் மகசூலை கணித்திட நடுவர்களான விருதுநகர் வேளாண்மை இணை இயக்குனர் விஜயா, மதுரை வேளாண்மை துணை இயக்குனர் நீர் மேலாண்மை பயிற்சி நிலையம் சி.கமலா லட்சுமி மற்றும் விவசாய பிரதிநிதி கா.பரமானந்தம் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது ஸ்டாமின் கூடுதல் இயக்குனர் சங்கரலிங்கம் கலந்து கொண்டார்.

மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் கு.தனலட்சுமி, வேளாண்மை அலுவலர் குருலக்ஷ்மி ஆகியோர் உடன் இருந்தனர். அறுவடை செய்யப்பட்ட மகசூல் விபரம் மாநில அளவில் இயக்குநர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி தெரிவித்துள்ளார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 12.02.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 26 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 24 | 28 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 24 | 48 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 50 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 46 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 48 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 20 | 26 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 25 | 30 |
| 8 | சுரைக்காய் | 15 | 18 | 64 | மு.கோஸ் | 15 | 18 |
| 9 | பாகற்காய் | 38 | 42 | 65 | மு.கோஸ்(கலர்) | 20 | 26 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 30 | 34 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 68 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 170 | 180 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 38 | 42 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 100 | 110 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 54 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 24 | 28 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 44 | | | | |
| 19 | முருங்கை | 80 | 90 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 80 | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 40 | 45 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 24 | 28 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 26 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 24 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 25 | 30 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |
| 55A | சுவரை | 45 | 50 | | | | |

# லால்குடி வட்டார விவசாயிகளின் நில உடைமை பதிவுகள் சரிபார்த்தல் முகாம்



திருச்சி, பிப்.12

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டார பகுதியில் உள்ள விவசாயிகளின் நில உடைமை பதிவுகள் சரிபார்த்தல் முகாம் கடந்த 9ம் தேதி முதல் தொடங்கி 15 ஆம் தேதி வரை அனைத்து ஊராட்சி மன்ற அலுவலகங்களில் நடைபெறுகிறது. வேளாண்மை உதவி இயக்குனர் சத்தியப்பிரியா பார்வையிட்டார்.




வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த திட்டங்களில் அவர்களின் சுய விபரங்களை விவசாயிகள் பெரும் பதிவேடு ஃபார்மர் ரிஜிஸ்ட்ரி என்னும் புதிய திட்டத்தில் கீழ் விவசாயிகளின் நில உடைமைகள் சரி பார்த்தல் முகாம் ஊராட்சி மன்ற அலுவலகங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களில் நடைபெற்றது. வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் முகாமில் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது நில உடைமைகளை பதிவு செய்து செய்து சரி பார்த்தனர். லால்குடி வட்டார பகுதியில் நடைபெற்று வந்த முகாமில் வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா முகாமில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அதிக மகசூல் பெற விதையின் தரப் பரிசோதனை அவசியம்

வேளாண்மையின் உற்பத்திக்கு விதை அடிப்படை இடு பொருளாகும். விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதற்காக தமிழ்நாடு அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் அங்ககச்சான்றளிப்புத் துறையின் கீழ் விதைச்சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப்பரிசோதனை மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

கரூர் மாவட்டத்திலுள்ள நம்பர் A5, 1வது குறுக்குத் தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் 4 என்ற முகவரியில் விதைப்பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. விதையின் தரத்தை அறிய விதைப்பரிசோதனை செய்யப்படுகிறது.




இப்பரிசோதனையில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு கண்டறியப்பட்டு உடனுக்குடன் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றது. இவ்விதைப்பரிசோதனை நிலையத்தில் சான்று விதை, ஆய்வாளர் விதை, விவசாயிகளிடமிருந்தும், விதை விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர் களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

விதைச்சட்டம் 1966 பிரிவு 7 (பி) யின் படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

| வ. எண் | பயிர் | குறைந்தபட்ச முளைப்புத்திறன் (%) |
|---|---|---|
| 1. | நெல் | 80% |
| 2. | வீரிய மக்காச்சோளம் | 90% |
| 3. | உளுந்து, துவரை, பாசிப்பயறு வகைகளுக்கு | 75% |
| 4. | நிலக்கடலைக்கு | 70% |
| 5. | எள் | 80% |
| 6. | கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, குதிரைவாலி | 75% |
| 7. | காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, வெங்காயம், கொத்தவரை, கீரை வகை | 70% |
| 8. | மிளகாய், பூசணி, பரங்கி, புடல், பாகல், பீர்க்கன், தர்பூசணி | 60% |
| 9. | வெண்டை | 65% |

ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய்ய வாங்கும் விதை களையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிய விதை மாதிரி களை விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் நெல் விதை 50 கிராம் உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம் காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் -10 கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி-100 கிராம், பாகல், புடல்-250 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற் கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அ லு வ ல ர் க ள் ர மே ம ஷ் கு ம ா ர் ம ற் று ம் அ . அ ப ர் ன ா ே க ட் டு க் கொள்கிறார்கள்.




**முளைப்புத்திறன் சோதனைமுறை**

# அதிக விளைச்சல் பெற விதை பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்றிட விதைகளை விதைக்கும் முன் தங்களிடம் உள்ளது நல்ல தரமான விதைதானா என கண்டறிந்து பின்னர் விதைப்பதே மிகவும் சிறந்தது. நல்ல முளைப்பு திறனும், தூய்மையும் கொண்ட விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற இயலும். நல்ல முளைப்பு திறன் கொண்ட விதைகள் அதிக வீரியம் உடைய தாகவும், அதிக அளவில் உற்பத்தி திறன் கொண்டதாகவும் இருப்பதால் வயலில் இடப்படும் உரங்கள் மற்றும் பாய்ச்சப்படும் நீர் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு அதிக விளைச்சலை பெற முடியும்.




எனவே விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் தங்களிடம் இருக்கும் விதைகளை தரமானது தானா என பரிசோதனை செய்து பயன்படுத்திட வேண்டும். மேலும் விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன் விதை பரிசோதனைக்கான கட்டணம் ரூபாய் 80 செலுத்த வேண்டும்.

**விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி :** மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 15, காளியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினம் -611001.

விதை மாதிரியுடன் விதை மாதிரியின் பயிர், இரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை ஆகியவற்றுடன் அனுப்புநர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியுடன் கொடுத்து பயன் பெறுமாறு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் செ.பிரசன்னா, அ.அமுதாதேவி தெரிவித்துள்ளனர்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE
Rithvik Pipe

# குறைந்த பராமரிப்பில் நிறைந்த மகசூல் தரும் பப்பாளி சாகுபடி



பப்பாளி பழம் இன்று எல்லா காலகட்டத்திலும் கிடைக்க கூடிய விலை மலிவான பழம். 18 வகையான சத்துகள் கொண்டே ஓரே பழம் பப்பாளி. இது ஏழைகளின் கனி என்று செல்லமாக அழைக்கப்படுவதுண்டு.

**பப்பாளியின் வரலாறு**

இதனுடைய அறிவியல் பெயர் (CARICA PAPAYA) இது CARICA CEAE தாவர குடும்பத்தை சார்ந்தது. இதனுடைய தாயகம் மெக்சிகோ, இருந்தாலும்கூட எல்லா நாடுகளிலும் பயிரிடப் படுகிறது.

பப்பாளி காயாக இருக்கும் போது பச்சை நிறமாகவும் நன்கு கனிந்து பழமாக இருக்கும் போது மஞ்சள் நிறமாகவும் தோற்ற மளிக்கும். கனிந்த பழங்கள் மிக இனிப்பாக இருக்கும்.

இதனுடைய விதைகள் கருப்பாகவும் பார்ப்பதற்கு கரு மிளகு போன்று காணப்படும். பப்பாளி மரத்தின் இலைகள் ஆமணக்கு செடியின் இலைகளின் வடிவத்தில் இருக்கும். இலைகளும் மருத்துவ குணமுள்ளது. மரங்கள் நெடு நெடு என்று விரைவாக வளரக்கூடியது.

**சாகுபடி முறை**

பப்பாளியை விதை மூலமாகவும் நாற்று செடிகள் வாயிலாகவும் நடலாம். நடுவதற்கு நிலத்தை நன்றாக தயார் செய்ய வேண்டும். வடிகால் வசதியுள்ள நிலமே இதற்கான நிலமாகும். தண்ணீர் தேங்க கூடாது.

**இரகங்கள்**

கோ 3, கோ 7 கோ 8 மற்றும் ரெட்லேடி, இது ஏற்றுமதிக்கான வணிக ரீதியாக பயிரிடக்கூடிய பப்பாளியாகும்.

## நடவு எப்படி?

45X45X45செ.மீ ஆழமான குழி எடுத்து ஒரு குழிக்கும் மற்றொரு குழிக்கும் இடையிலே 1.8 மீட்டர் இடைவெளியில் அமைக்கவேண்டும். குழியில் மக்கிய சாண உரத்துடன் உயிரியல் பூஞ்சான கொல்லி மருந்து கலந்து போடவும். நாற்றுகளையோ (40-45 நாள் வயதான) விதைகளையோ நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 900-1000 நாற்றுகள் தேவை.

நாற்றுகளின் தண்டுகள் மெல்லியதாக இருப்பதால் காற்றில் சேதமடையாமல் இருக்க குச்சிகளை அருகில் நட்டு பராமரிக்கவும். தேவைக்கேற்ப உரம் பூச்சி மருந்து நிர்வாகம் செய்ய வேண்டும். பொதுவாக பப்பாளியில் அதிகமாக தாக்குவது மாவு பூச்சியாகும். இது வெயில் மற்றும் வறண்ட






காலங்களில் அதிகமாக தாக்கும். ஆரம்ப நிலையிலே அவற்றை கட்டுப்படுத்த ஓட்டுண்ணிகளை பயன்படுத்த வேண்டும்.

## பப்பாளியில் ஆண், பெண் மரங்களை எப்படி கண்டு பிடிப்பது?

பப்பாளியில் ஆண், பெண் மரங்களை அதனுடைய பூக்கின்ற காலத்தில் தான் இனம் காண முடியும். கிளை களுக்கும் தண்டுக்கும் இடையே ஓரே பூ மட்டும் பூத்தால் அது பெண் பப்பாளி எனவும், கொத்தாக பூ காணப்பட்டால் அது ஆண் பப்பாளி எனவும் அடையாளம் காண முடியும்.

பப்பாளி ஒரு அயல் மகரந்த சேர்க்கை தாவரமாகும். சில விவசாயிகள் ஆண் பப்பாளியை அப்படியே வெட்டி விடுவார்கள். அது தவறானது. பெண் மரங்கள் 10-15க்கு ஒரு ஆண் மரங்கள் இருக்க வேண்டும்.

அப்போது தான் காய்ப்பு திறன் அதிகமாகும். கோ3, கோ7 போன்ற இரு பால் மரங்களில் (BI SEXVIVAL FLOWERS) பெண் பூக்கள் பூக்கின்ற மரங்களை மட்டும் அப்புறப்படுத்த வேண்டும்.

பப்பாளி 6 மாதத்திலே பூக்க ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் பூ பிஞ்சு உதிர்வதை தடுக்க வளர்ச்சி ஊக்கிகள் (பஞ்சகாவியா, மீன் அமிலம்) போன்றவற்றை தெளிக்கலாம். 7 வது மாதத்தில் காய் காய்க்க தொடங்கும். 9வது மாதங்களிலிருந்து அறுவடை செய்யலாம். 13வது மாதம் வரை மகசூல் இருக்கும். அதற்கு பிறகு படிப்படியாக குறையும்.

**பப்பாளி பழம் மருத்துவ குணமுள்ளதா?**

பப்பாளியில் அதிக அளவாக கரோட்டின் சத்து இருப்பதால் பச்சையாக காய் உள்ளது. நாம் உண்ணும் போது இந்த நிறமி






நம்முடைய உடலில் VITAMINS A-யாக மாறிவிடும். அதுமட்டுமல்லாது, வைட்டமின் சி-யும் இதில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே விவசாயிகள் குறைந்த பராமரிப்பில் கூடுதலான வருவாய் பெற பப்பாளி பயிரை சாகுபடி செய்யலாம், பப்பாளியை அனைத்து தரப்பு மக்களும் வாங்கி சாப்பிட கூடிய மருத்துவ குணமுள்ள பழமாகும். இதனுடைய தேவை நாளுக்கு நாள் அதிகரிக்க தான் செய்கிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தனியார் நிறுவனத்தை பார்வையிட்டு காளான் வளர்ப்பு குறித்த அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்




செங்கல்பட்டு, பிப்.12

எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள், பிரிட்டிஷ் ஆக்ரோ புரொடக்ட்ஸ் (இந்தியா) ப்ரைவேட் லிமிடெட் நிறுவனத்தை அண்மையில் பார்வையிட்டனர்.




அங்கு, பொதுமேலாளர் அருணை சந்தித்து, நிறுவனத்தின் அடிப்படை விவரங்களை அறிந்தனர். பின்னர், உற்பத்தி மேலாளர் செந்தில் அரசு, காளான் உற்பத்தி, அதற்கான மூலப்பொருட்கள் மற்றும் கம்போஸ்ட் தயாரிப்பு முறைகள் குறித்து விரிவாக விளக்கினார். மாணவர்கள், காளான் வளர்ப்பின் தொழில்நுட்பங்கள், தேவையான சூழ்நிலைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சிகளைப் பெற்றனர். இந்த பயணம், மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை விரிவாக்குவதில் முக்கிய பங்களிப்பைச் செய்தது. மேலும், காளான் வளர்ப்பின் நவீன முறைகள் மற்றும் சந்தை வாய்ப்புகள் பற்றிய புரிதலை மாணவர்கள் பெற்றனர். இத்தகைய தொழிற்சாலைப் பயணங்கள், மாணவர்களின் தொழில் முனைவுத் திறனை மேம்படுத்த உதவுகின்றன. மாணவர்கள், காளான் உற்பத்தி தொடர்பான தங்களின் கேள்விகளுக்கு நிபுணர்களிடமிருந்து பதில்கள் பெற்றனர். இது, அவர்களின் கல்வி பயணத்தில் முக்கிய அனுபவமாகும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சம்பா நெல் அறுவடையின் போது கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள்



பெரம்பலூர் மாவட்டத்தில் நெல் சாகுபடியானது குருவை, சம்பா மற்றும் நவரை பட்டங்களில் சாகுபடி செய்யப்படுகின்றது. சம்பா பருவத்தில் மட்டும் சுமார் 4000 (நாலாயிரம்) ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. தற்சமயம் பெரம்பலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் சாகுபடி சய்யப்பட்ட நெற் பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இச்சமயத்தில் மகசூல் இழப்பு இல்லாமலும், நெல் மணிகள் தரமானதாகவும் இருக்க அறுவடையின் போது சில உத்திகளை விவசாயிகள் கடைப்பிடிக்கலாம்.




● நெல் அறுவடைக்கு தயார் என்பதனை நெல் மணிகள் மஞ்சள் நிறமாக (80-85%) மாறுவதை வைத்து விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். அந்த சமயத்தில் அறுவடை செய்வது சிறந்ததாகும்.

● அறுவடையின் போது நெல் மணிகளின் ஈரப்பதம் 20-25 சம வீதத்திற்குள் (ஈரப்பத அடிப்படையில்) இருக்க வேண்டும். இந்த ஈரப்பதத்தில் நெல் உடையாமல் உறுதியாக இருக்க வேண்டும். ஆனால் சேமிப்பின் போது ஈரப்பதம் அதிகமாக இருந்தால், தானியத்தின் தரத்தை குறைப்பதுடன் அதிக இழப்பிற்கு வழிவகுக்கும். மேலும் விதையின் முளைப்புத் திறனும், குறைய வாய்ப்புள்ளது. ஆகவே 8 முதல் 12 மாதம் வரை சேமித்து வைக்க ஈரப்பதம்13 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும்.

● பயிரின் மேற்பரப்பு ஈரப்பதம் அதிகமாக இருந்தால் (முந்தைய மழை அல்லதுஅ திகாலையில்) மேற்பரப்பு ஈரப்பதம் காய்ந்து போகும் வரை காத்திருப்பது நல்லது.

● கதிரடித்தல் மற்றும் உலர்த்துதல் அறுவடை செய்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் செய்யப்படவேண்டும்.

● பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூரை தலைமையிடமாக கொண்டு விதை சான்றளிப்பு மற்றம் உயிர்மசான்றளிப்பு துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இப்பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள் விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும், விதையின் தரம் அறிய நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப் பதம் மற்றும் பிற ரக கலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படு கின்றன. எனவே, விதையின் தன்மையறிந்து விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று பயன் பெறலாம் என விதை பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ரெ.ஆஷாலதா மற்றும் ரா.அம்பிகா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# கோமாரி நோயை குணப்படுத்தும் செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



செங்கல்பட்டு, பிப்.12

எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவிகள் ‘கிராம தங்கல் திட்டத்தின்‘ ஒரு அங்கமாக ஜேம்ஸ் ஸ்டூவர்ட் குழு மாணவிகள் கிராம மக்களுக்கு செய்முறை விளக்கம் அளித்தனர். வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர், விவசாய விரிவாக்கத்துறை ஆசிரியர்கள் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் க.அன்புக்கரசி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் கீழ்கரணை கிராமத்தில் விவசாயிகளுக்கு கோமாரி நோயைப் பற்றியும் அவற்றை எவ்வாறு குணப்படுத்து வது என்பதனை பற்றியும் செய்முறை விளக்கம் அளித்தனர்.

இதில் வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டு எவ்வாறு கோமாரி நோயை குணப்படுத்துவது என்பதனை பற்றி விவசாயி களுக்கு செய்து காட்டினர். இதனை கிராம மக்கள் அறிந்து பயன் பெற்றனர்.

# நெல் விதை உற்பத்தி - அறுவடைக்குப் பின்சார் தொழில்நுட்பங்கள்

புதுக்கோட்டை, பிப்.12

தமிழ்நாடு அரசின் விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையின் கீழ் பதிவு செய்து வயல் தரம் தேறிய விதைப் பண்ணை களை அறுவடை செய்யப்படும் போதும், பின்பு வயல்மட்ட விதை களை பாதுகாப்பதிலும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் மதியழகன் கூறியதாவது, வயல் தரத்தில் தேறிய விதைப்பண்ணைகளில் இயந்திர அறுவடை செய்யும் போது பிறரக கலப்பு ஏற்படுவதற்கு முன்பாக இயந்திரத்தை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். பின்பு இயந்திரத்தில் அறுவடை செய்யப்பட்டு வரும் முதல் ஐந்து மூட்டைகளை விதைக்கு பயன் படுத்துவதை தவிர்த்து விட்டு மீதமுள்ள விதைகளை விதைக்காக எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இயந்திர அறுவடையினால் ஏற்படும் பிற ரக கலப்பு தவிர்க்கப்படுகிறது.

விதைப்பண்ணைகளிலிருந்து அறுவடை செய்யப்படும் விதை களை புதிய கோணிப்பைகளில் மட்டுமே சேகரிக்க வேண்டும். அறுவடை செய்யப்பட்ட வயல்மட்ட விதைகளை உடனடியாக காய வைத்து ஈரப்பதம் 13 சதவீதத்துக்கு கீழ் கொண்டு வர வேண்டும். இதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் நெல் விதைகளில் பூஞ்சாண வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதுடன் நெல் விதைகளின் நிறம் மாறுவதோடு முளைப்புத் திறனும் பாதிக்க கூடும். உலர் களத்தை நன்றாக சுத்தம் செய்த பிறகே நெல் விதைகளை களத்தில் பரப்பி மிதமான வெயிலில் காய வைத்து அடிக்கடி கிளறி விட்டு படிப்படியாக ஈரப்பதத்தை குறைக்க வேண்டும். இதன் மூலம் நெல் விதைகளின் முளைப்புத் திறனை பாதுகாக்கலாம். நன்கு காய வைக்கப்பட்ட வயல்மட்ட விதைகளை புதிய கோணிப்பைகளில் பிடித்து அதில் விதைச்சான்று எண், பயிர், ரகம், சான்றளிப்பு நிலை போன்ற விவரங்களை எழுதி சணல் கொண்டு தைத்து ஈயக்குண்டு கோர்க்க வேண்டும். இதனை தொடர்ந்து விதைச்சான்று அலுவலர் விதைக்குவியலை ஆய்வு செய்து முத்திரையிட்டு, அங்கீகாரம் பெற்ற விதைக்குவியல்களை விதைச்சுத்தி நிலையத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்குவார். விதை சுத்தி நிலையத்தில் தொடர் சான்று பணி மேற்கொள்ளப்படும். மேற்கண்ட வழிமுறைகளை விதைப்பண்ணை விவசாயிகளும், விதைப்பண்ணை உற்பத்தி யாளர்களும் முறையாக கடைபிடித்து தரமான விதை உற்பத்திக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என கூறியுள்ளார்.

# பண்ணை தொழில் நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



செங்கல்பட்டு, பிப்.12

எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு ரோஜர்ஸ் குழு மாணவர்கள், கடலூர் பண்ணை தொழில் நிறுவனத்தை (Farm Kadalur Industry) அண்மையில் பார்வையிட்டனர். அங்கு, தொழில் நிறுவனத்தின் மேலாளர் ஏ.ரிச்சர்டுடன் கலந்துரையாடி, பால் செயலாக்க முறைகள் மற்றும் பண்ணையில் தயாரிக்கப்படும் பல்வேறு மதிப்பு கூட்டு தயாரிப்புகள் பற்றிய முக்கியமான தகவல்களை அறிந்தனர். ரிச்சர்ட், பால் சேகரிப்பு, பாஸ்சுரைசேன், பாக்கேஜிங் மற்றும் விநியோகத்தின் படிப்படியான செயல்முறைகளை விரிவாக விளக்கினார்.

கூடுதலாக, மாணவர்கள் பண்ணையின் தினசரி செயல் பாடுகளை கவனித்து, உணவுப் பராமரிப்பு மற்றும் சிறப்பு கால்நடை உணவுக் கூடுதல்கள் மூலம் பால் உற்பத்தி மற்றும் கால்நடை ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முறைகளைப் பற்றி அறிந்தனர். ரிச்சர்ட், பசுமை தீவனம், சைலேஜ், மற்றும் செறிவு உணவு போன்ற உணவுகளின் வகைகள், மேலும் கால்நடை உற்பத்தி மற்றும் பண்ணை செயல்திறனை மேம்படுத்துவதற் கான கனிமங்கள் மற்றும் வைட்டமின்களின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்தப் பயணம், மாணவர்களுக்கு நடைமுறை பால் பண்ணை செயல்பாடுகள் மற்றும் பாரம்பரிய வேளாண் முறைகளுடன் நவீன நடைமுறைகளை ஒருங்கிணைக்கும் முக்கியத்துவத்தைப் பற்றி நேரடியாக அனுபவம் பெற உதவியது. இத்தகைய புலப் பயணங்கள், கோட்பாட்டுத் திறனையும் நடைமுறை அனுபவத்தையும் இணைக்க முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.